# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தம்)

***1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ அவர்களால் 2021, சனவரி மாதம் 07 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது*

*(2020, திசெம்பர் மாதம் 21 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

***[ 22 ஆம் சட்டமூலம் ]***


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தம்)

**1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டத்தைத் திருத்து வதற்கான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**2.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 2 ஆனது, சொல்லப் பட்ட சட்டத்தின் உபபிரிவு 2(1) ஐ நீக்கி, அதற்குப் பதிலாக பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

2(1). இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளாவன பின்வரும் வகுப்புக்களின் எவருக்கும் அல்லது நபர்கள் குறித்த விவரணங்களுக்கும் சொந்தமான ஒவ்வொரு நபருக்கும் பொருந்தக்கூடியதாய் அமைதல் வேண்டும்:-

(அ) குடியரசின் சனாதிபதி;

(ஆ) பாராளுமன்ற சபாநாயகர்;

(இ) அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், ஏனைய அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள்;

(ஈ) பாராளுமன்ற உறுப்பினர்கள்;

(உ) சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நீதிபதிகள் மற்றும் அரச அதிகாரிகள், அமைச்சரவையி னால் நியமிக்கப்பட்ட அரச அதிகாரிகள்;

(ஊ) அரசியலமைப்பின் உறுப்புரை 41 அ(1)(உ) பிரிவுகளின் பிரகாரம் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத அரசியலமைப்புப் பேரவை உறுப்பினர்கள்;

(எ) அரசியலமைப்பின் உறுப்புரை 41 (ஆ) வுக்கான நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட வேறு ஏதேனும் ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்கள்;

(ஏ) நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப் பட்ட நீதிச் சேவை அதிகாரிகள் மற்றும் நிரற் படுத்தப்பட்ட அரச அதிகாரிகள் மற்றும் அனைத்து அரச திணைக்களங்களினதும் பதவிநிலை அதிகாரிகள்;

(ஐ) வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங் களில் பணியாற்றி வரும் உயர் ஸ்தானிகர்கள், தூதுவர்கள் மற்றும் நாட்டுப் பிரதிநிதிகள் துணைத்தூதுவர்கள்);

(ஒ) மாகாண சபைகளின் உறுப்பினர்கள்;

(ஓ) உள்ளூராட்சி அதிகார சபைகளின் உறுப்பினர்கள்;

(ஔ) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதி தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உள்ளூராட்சி

*அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின்கீழ் தேர்தல்கள் நோக்கம் கருதி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள்;*

*(க) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதி தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின்கீழ் நடைபெறவுள்ள தேர்தலுக்கென நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள்;*

*(ங) அமைச்சர்கள் மற்றும் அரச திணைக்களங்களில் உள்ள பதவிநிலை உத்தியோகத்தர்கள்;*

*(ச) வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் பணியாற்றி வரும் பதவிநிலை உத்தியோகத்தர்கள்;*

*(ஞ) சபைத் தவிசாளர்கள், பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் பதவிநிலை உத்தியோகத்தர்கள்;*

*(ட) அரச கூட்டுத்தாபனமொன்று அல்லது சபையொன்று 25 சதவீதத்திற்குக் குறையாத மூலதனப் பங்கினைக் கொண்டுள்ள நிலையில் கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் தலைவர்கள் பணிப்பாளர்கள்;*

(ண) தொழிற்சங்க கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் நிறைவேற்று அதிகாரிகள்;

(த) செய்திப் பத்திரிகைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 02 இன் கீழ் பிரகடனங்களை மேற்கொள்ள வேண்டிய செய்திப் பத்திரிகைகளின் உரிமையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய பீட உத்தியோகத்தர்கள்;

(ந) ஒழுங்குவிதிகள் மூலம் குறிப்பிடக்கூடியவாறு செயற்பட்டு வரும் அத்தகைய பகுதிகளைச் சேர்த்தல் ஏனைய அலுவலர்கள்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு **4** ஆனது அதனை நீக்கி அதற்குப் பதிலாக பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

**4.** சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்த பிரகடனமானது பின்வரும் வகையில் செய்யப்படுதல் வேண்டும் :-

(அ) சபாநாயகர் அவர்களுக்கு-

(i) குடியரசின் சனாதிபதி;

(ii) பாராளுமன்ற உறுப்பினர்கள்;

(ஆ) சனாதிபதி அவர்களுக்கு-

(i) இந்தச் சட்டத்தின் பிரிவு 02(1) இன் பந்திகளான (ஆ), (இ), (உ), (ஊ), (எ) மற்றும் (ஐ) ஆகியனவற்றில் குறிப்பிடப் பட்டுள்ள நபர்கள்.

(இ) நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு-

(i) இந்தச் சட்டத்தின் பிரிவு 02(1) இன் பந்தி (ஏ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள்.

(ஈ) சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளருக்கு-

(i) இந்தச் சட்டத்தின் பிரிவு 02(1) இன் பந்திகளான (ஒ), (ஓ), (ங), (ச), (ஞ), (ட), (ண) மற்றும் (த) ஆகியவற்றில் குறிப்பிடப் பட்டுள்ள அலுவலர்கள்.

(உ) தேர்தல் ஆணைக்குழுவுக்கு-

(i) இந்தச் சட்டத்தின் பிரிவு 02(1) இன் பந்திகளான (ஔ) மற்றும் (க) ஆகியற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள்.

**4**. இந்தச் சட்டத்தின் பிரிவு 9(1) ஆனது, "ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத" எனும் சொல்லை நீக்கி அதற்குப் பதிலாக, "நூறாயிரம் ரூபாவுக்கு மேற்படாத" எனும் சொல்லை அதற்குப் பதிலாகச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 10(1) ஆனது, "அமைச்சர் ஒழுங்குவிதியை இயற்றலாம்" எனும் சொல்லை நீக்கி அதற்குப் பதிலாக, "சனாதிபதி ஒழுங்கு விதிகளை இயற்றலாம்" எனும் சொற்களைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.